1992 மார்ச் 23]

318—

குளுக்கோஸ் தொழிற்சாலை

*760 திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்னசேலம் பகுதியில் அதிகமாகப் பயிராகும் மரவள்ளிக் கிழங்கைப் பயன்படுத்தி குளுக்கோஸ் தொழிற்சாலை நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

முற்பகல் 10,35

மாண்புமிகு திரு. எஸ், நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சின்னசேலம் பகுதியில். மரவள்ளிக்கிழங்கைப் பயன் படுத்தி, குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலை, நலிந்த ஆலையாக மாறுவது, சிக் யூனிட்டாக மாறுவது, பொதுவாக அந்த ஆலைக்குத் தேவையான ரா-மெட்டிரியல்ஸ், மூலப் பொருட்கள், கிடைப்பது சிரமமாக இருப்பதும், அவைகள் கிடைக்கும் இடம் ஆலைக்கு வெகு தூரத்தில் இருந்து வருவதும்தான் காரணங்களாக இருக் கின்றன. ஆனால் என்னுடைய சின்னசேலம் பகுதியில், விவசாய மக்கள் மிகப் பெரிய பயிராகவும், பிரதானப் பயிராகவும் தயாரிக் கும் மரவள்ளிக்கிழங்கைப் பயன்படுத்தி, குழந்தைகள், நோயாளி கள், வயோதிகர்கள். விளையாட்டு வீரர்கள் ஆகியோர்களுக்கு வெகு விரைவில் சத்தும், சக்தியும் தரும் இந்த குளுக்கோஸ் தொழிற்சாலையை ஏற்படுத்தினால், விவசாயிகளுக்கு மிகப் பெரிய விலை பொருளான மரவள்ளிக்கிழங்கிற்கு. தனியார் கிடுக்குப் பிடியிலிருந்து தப்பித்து, நல்ல விலை கிடைக்கும் என்பதால், இதை அரசு பரிசீலனை செய்து, அங்கே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மர வள்ளிக்கிழங்கிலிருந்து நிர்மம் போதுமான அளவிற்கு தயாரிப்பதற்கு உரிமங்கள் தமிழ்நாட்டிலே ஏற்கனவே, வழங்கப்பட்டுவிட்டன. மரவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து பெரிய அளவில் குளுக்கோஸ் மாவு மற்றும் திரவ குளுக்கோஸ் தயாரிக்கப்படுவதற்கு அவை பயன்படுத்

வதால். மரவள்ளிக்கிழங்கு மாவு குளுக்கோஸ் தயாரிப்பதற்கு மட்டும் என உபரியாகக் கிடைப்பதில்லை, எனவே, மாவுப் பொருட்கள் ஜவுளித் தொழிலில் அதிக அளவில் பயன்படுத்தப் படுகிறது, எனவே, தற்போதைக்கு தேவையில்லை என அரசு கருதுகிறது.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரவள்ளிக்கிழங்கிலிருந்து தயாரிக்கும் ஸ்டார்ச் (மாவு) சாகோ (ஜவ்வரிசி) போன்ற பொருட்களுக்கு சரியான விலையை நிர்ணயிப்பது யார், அதேசமயத்தில். இந்த உற்பத்தி அதிகமாகும் நேரத்தில், அதன் விலையைக் குறைத்து விடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரிடம் விலை நிர்ணயம் எல்லாம் வராது, தனிக் கேள்வி போடவும், வினா எண் 300, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கு இணங்க திரும்ப எடுத்துக் கொள்ளப்படுகிறது. திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

300—

பூந்தமல்லியை புதிய வட்டமாக்குதல்

*5193— திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம், ஸ்ரீபெருந் புதூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து பூந்தமல்லியைம் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் உருவாக்கப் படுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நிறைவேற்றப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தச் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது, ஆய்வு முடிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்